**பிலிப்பைன்ஸ் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஃபெர்டினாண்ட் R. மார்கோஸ் ஜூனியர் அவர்களின் இந்திய அரசுமுறைப் பயணம் (ஆகஸ்ட் 04-08, 2025)**

ஜூலை 31, 2025

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்பை ஏற்று, பிலிப்பைன்ஸ் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஃபெர்டினாண்ட் R. மார்கோஸ் ஜூனியர் அவர்கள் 04-08 ஆகஸ்ட் 2025 தேதிகளில் அரசுமுறைப் பயணமாக இந்தியா வருகிறார். அவருடன் தனது மனைவி மேடம் லூயிஸ் அரனேட்டா மார்கோஸ் மற்றும் பிற அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் மூத்த அதிகாரிகள் உட்பட உயர் மட்ட பிரதிநிதிகளுடன் இணைந்து வணிக பிரதிநிதிகளும் வருகை தருவார்கள். 08 ஆகஸ்ட் 2025 அன்று பிலிப்பைன்ஸ்-க்கு திரும்புவதற்கு முன்னர், ஜனாதிபதி மார்கோஸ் அவர்கள் பெங்களூருவிற்கு வருகை தருவார்.

2. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பதவியை ஏற்றதிலிருந்து, இது இந்தியாவிற்கு ஜனாதிபதி மார்கோஸ் அவர்களின் முதல் வருகையாக இருக்கும். இந்த வருகையின் போது, பிரதமர் மற்றும் ஜனாதிபதி மார்கோஸ் இருவரும் 05 ஆகஸ்ட் 2025 அன்று இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த திட்டமிட்டுள்ளனர். ஜனாதிபதி மார்கோஸ் அவர்கள் மாண்புமிகு ஜனாதிபதி திருமதி. திரௌபதி முர்மு அவர்களையும் சந்திக்க உள்ளார். இந்த வருகையின் போது வெளிவிவகார அமைச்சர், டாக்டர். S. ஜெய்சங்கர் அவர்கள் ஜனாதிபதி மார்கோஸ் அவர்களை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

3. நவம்பர் 1949-யில் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் இடையே அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்டன. வர்த்தகம் மற்றும் முதலீடு, இராணுவம் மற்றும் பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, விவசாயம், சுகாதாரம், மருந்துகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் உட்பட பரந்த அளவிலான துறைகளில் இரு நாடுகளும் ஒரு வலுவான கூட்டாண்மையை

உருவாக்கியுள்ளன.  ஏசியன் உடன் இந்தியாவின் விரிவான உத்திசார் கூட்டாண்மை உட்பட இரு நாடுகளும் பிராந்திய அளவில் நெருக்கமாக ஈடுபடுகின்றன.

4. பிலிப்பைன்ஸ் உடனான இந்தியாவின் உறவுகள் நமது 'ஆக்ட் ஈஸ்ட்' கொள்கை, மகாசாகர் தொலைநோக்கு திட்டம் மற்றும் இந்தோ-பசிபிக் பற்றிய நமது பார்வையின் ஒருங்கிணைந்த தூணாக உள்ளன.  ஜனாதிபதி மார்கோஸ் அவர்களின் வரவிருக்கும் இந்த பயணம், இந்தியா-பிலிப்பைன்ஸ் அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டுவிழா உடன் இணைந்துள்ளது.  எதிர்கால இருதரப்பு ஒத்துழைப்புக்கான பாதையை அமைப்பதற்கும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகளில் ஈடுபடுவதற்கும் இரு தலைவர்களுக்கும் இந்த வருகை ஒரு வாய்ப்பாகும்.

புது தில்லி

ஜூலை 31, 2025